# உலகின் மாபெரும் விசாரணை



# உலகின்
# மாபெரும் விசாரணை

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.
– சங்கீதம் 119: 105

**Copyright :**
*Northwest Indiana Bible Students*
*P.O. Box 767*
*Hebron, IN 46341*
*www.Blessedbible.com*

**Translated by :**

*www.foodfornewcreature.com*

# உலகின் மாபெரும் விசாரணைக்கான முன்னுரை

*இயேசு தாம் நியாயந்தீர்க்கப்பட்டது போல உலகத்தை நியாயந்தீர்க்கப்போவதில்லை. மாறாக,* ***"மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்." – அப்போஸ்தலர்17:31***

*யூதர்களுடைய பிரமாணத்தின்கீழ், யூதாஸ் ஒரு துணை குற்றவாளி அல்லது ஒரு கூட்டாளி எனக் கருதப்பட்டாரே ஒழிய நம்பகமான ஒரு சாட்சியாகக் கருதப்படவில்லை; எனவே, இயேசுவைச் சட்டப்பூர்வமாகக் கைது செய்வதற்கு யூதாசுடைய வார்த்தையானது/சாட்சியானது போதுமானதாக இருக்கவில்லை.*

1. *தன் ஜீவன்கூட பறிக்கப்படலாம் எனும்வாறு மரணத்தண்டனைக்குப் பாத்திரமான ஒரு குற்றத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை, சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பும்சரி, சூரிய உதயத்திற்கு முன்பும்சரி, கைதுசெய்யும் காரியத்தை அவர்களுடைய சட்டமானது தடைசெய்திருந்தது. இருட்டினப் பிறகு ஒருவரைக் கைதுசெய்வது அந்நபரின் உரிமைகளை மறுப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் இயேசுவையோ நள்ளிரவில் கைதுசெய்தார்கள்.*

2. *இயேசுவை விசாரிப்பதற்கு அன்னாவுக்குச் எந்தச் சட்டப்பூர்வமான உரிமையும் கிடையாது. அவர் நீதிமன்றத்தில் ஓர் அதிகாரியாகவும் இருக்கவில்லை, எப்படிப் பார்த்தாலும், ஒரே மனுஷனால் நடத்தப்படுகிற நீதிமன்றத்திற்கான எந்த ஏற்பாடும் அப்போது நடைமுறையில் இல்லை. சட்டத்தின்படி, குறைந்தது மூன்று பேராவது, அதிகபட்சம் எழுபத்து மூன்று பேராவது தேவைப்பட்டது. அவரிடம் இயேசுவைக் கைதுசெய்வதற்கு எந்த உகந்த குற்றச்சாட்டும் இருக்கவில்லை, கைது செய்யப்பட்ட பிறகுதான் என்ன குற்றத்தைச்சாட்டலாமென்று*

*காரணத்தைத் தேடலானார். தம்மைக் குறித்து தான் சாட்சி சொல்ல வேண்டியதில்லை என்பதை இயேசு அறிந்திருந்தார், மேலும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் தாம் செய்த வெளிப்படையான ஊழியத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்டினார்.*

3. *காய்பாவுக்கு முன்போ, அவர் ஒரு சட்டவிரோதமான விசாரணையின்கீழ் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார். மரணத்தண்டனைக்குப் பாத்திரமான விசாரணைகளில், நியாயாதிபதிகள் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பாக, இரண்டு இராப்பகல் லேசான பத்திய உணவினை (light diet) எடுத்துக்கொண்டு, அவசரமின்றி நிதானமாகவும் கவனமாகவும் நிதானிக்க வேண்டியிருந்தது. அவர்கள் தங்கள் சட்டத்தினுடைய இந்த அம்சத்தை முற்றிலும் ஒதுக்கி வைத்துவிட்டு, இயேசுவைக் கொல்லும்படிக்கு விரைவாகத் தீர்ப்புச்செய்தனர்.*

4. *அனைவரும் இயேசுவுக்கு எதிராக வாக்களித்தனர் – ஆனால் யூத நியாயப்பிரமாண வழக்கத்தின்படி, ஒரு மாறுபாடான வாக்குக்கூட அளிக்கப்படாதுபோனால், அது குற்றஞ்சாட்டப்-பட்டவர் விடுவிக்கப்படுவதற்குச் சமம் என்பதாக இருந்தது.*

***எபிரெயர் 5:7 – "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்"***

*இயேசு தாம் பயந்த விஷயத்தில் (தேவ பயம்) கேட்கப்பட்டார். அவர் கெத்செமனேயில் மிகவும் வியாகுலப்பட்டார் (அத்துடன் அவரது வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் இருந்தது என்று சில மூலப்பிரதிகள் குறிப்பிடுகின்றன). அவருடைய பயம் மெய்யானதாகவும், தேவபயமாகவும் இருந்தது. புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்ததைப் போலவே எல்லாவற்றையும் சரியாய்ச் செய்ய அவர் அழைக்கப்பட்டிருந்தார். அதில் எதையாவது செய்யாமல் விட்டுவிட்டாலோ அல்லது தவறாகச் செய்தாலோ,*

*அது அவருடைய நித்தியமான மரணத்திற்கு வழிவகுத்து, தம்மை தம்முடைய பிதாவிடமிருந்து பிரித்துவிடுமே என்று எளிதில் அச்சத்திற்குள்ளாவது இயல்புதானே. தாம் அஞ்சின விஷயத்தில் அவர் கேட்கப்பட்டு உறுதியளிக்கப்பட்டார் / பலப்படுத்தப்பட்டார்.*

*மேலுமாக, தம்முடைய மரணத்தின் உண்மையான காரணத்தை மறைப்பதற்கேதுவாக ஏதேனும் பொய்யான மற்றும் பயங்கரமான குற்றச்சாட்டுகள் தம்மீது சுமத்தப்படக்கூடாதென்று ஆழ்ந்த கவலைப்படுவதற்கு அவருக்கு உகந்த காரணம் இருந்ததாக தெரிகின்றது. பொய்யான சாட்சிகளும், இவ்வுலகத்தின் தேவனான சாத்தானின் சகல வல்லமைகளும் இயேசுவின் மரணத்தில் பயன்படுத்தப்பட்டு வந்ததால், சத்தியத்திற்காக /உண்மைக்காக இயேசுவைக் கொலைசெய்வது, நிச்சயமாக ஆசாரியர்களுக்கும் சாத்தானுக்கும் பிடிக்காத ஒன்றாக இருந்திருக்க வேண்டுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனாலும், இயேசு* **ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய மேசியா** *மற்றும் அவர்* **யூதருடைய இராஜா** *என்கிற காரணத்தினால்தான் அவர் மரித்தார்/கொலைசெய்யப்பட்டார் எனப் பதிவுகள் தெளிவாக தெரிவிக்கின்றன – இரண்டு குற்றச்சாட்டுகளுமே உண்மைதான்.* ***மத்தேயு 26: 45, 46*** *– ஆகிய வசனங்களில், இயேசு அமைதியாக இருந்ததாகவும், தம் ஜெபத்திற்குப் பதில் கிடைத்துவிட்டதென்கிற நிச்சயமடைந்தவராகவும் இருந்தார் எனத் தெரிகின்றது. அவர் சத்தியத்திற்காக மனமுவந்து மரணிப்பவராக இருந்தார்.*

***யோவான் 19:21, 22*** *– ஆகிய வசனங்களில் கூட பாருங்கள், மதத் தலைவர்கள் இயேசுவினுடைய சிலுவையின்மேல் மூன்று பாஷைகளில் எழுதப்பட்ட மேல்விலாசத்தை,* **"யூதர்களின் இராஜா"** *என்பதிலிருந்து* **"தான் யூதருடைய இராஜா என்று அவர் சொன்னதாக"** *மாற்ற வேண்டுமென்று விரும்பியபோதும், பிலாத்து எரிச்சலடைந்து,* **"நான் எழுதினது எழுதினதே"** *என்று கூறிவிட்டார்.*

*நிச்சயமாக, இயேசு எத்துணை ஆறுதலடைந்திருப்பாரென்று சிந்தியுங்கள் அன்பர்களே. சில பொய்க்குற்றச்சாட்டிற்காக*

*மரிப்பதென்பது ஒரு காரியம், ஆனால் அவர்கள் விரும்பினபிரகாரம் விசாரிக்கப்பட்டிருந்தாலும், தேவனுடைய மேற்பார்வையானது பலமாகச் செயல்படுத்தப்பட்டதனால் இயேசு* **ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரன்** *என்பதாலும், அவர் யூதருடைய இராஜா என்பதாலும் மரிக்க நேர்ந்தது என்பது முற்றிலும் வேறொரு காரியமாகும்.*

# உலகின் மாபெரும் விசாரணை

*கர்த்தராகிய இயேசுவே உலகத்தின் மாபெரும் மனுஷனாக இருந்தபடியால், இது மாபெரும் விசாரணையாக இருந்தது. தேவனுடைய குமாரன் பாவமுள்ள மனிதர்களை நியாயந்தீர்ப்பாரென்று நீங்கள் எதிர்பார்க்கலாம், ஆனால், இல்லை இங்கேயோ பாவமுள்ள மனிதர்கள் தேவனுடைய குமாரனை நியாயந்தீர்த்தார்கள்.*

## நினைவுகூருதலின் தியானம்:

### கடைசி இராப்போஜனம் துவக்கி சிலுவையிலறையப்படும் வரை இயேசுவைப் பின்தொடரப்போகிறோம்

**நேரங்கள் தோராயமானவை:**

| | |
|---|---|
| **இரவு**<br>***8:00 – 10:00*** | ***நினைவுகூருதல் இராப்போஜனம் நிறுவப்பட்டது***<br>*மத்தேயு 26:26 – 30; லூக்கா 22:19 – 20; மாற்கு 14:22 – 26* |
| **இரவு**<br>***10:00 – 11:00*** | ***"புதிய பிரமாணம்" மற்றும் யோவான் 14 – இன் மென்மையான வார்த்தைகள் ஆகியன அவர்கள் மேல் வீட்டறையை விட்டு வெளியேறும் முன்பு பேசப்பட்டன. யோவான் 13 மற்றும் 14:*** *மேல் வீட்டறையில்.* ***யோவான் 14:31 – "எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்"*** *கெத்செமனே செல்லும் வழியில்:* ***யோவான் 15 மற்றும் 16 மற்றும் 17.*** |
| **இரவு**<br>***11:00 – 12:00*** | **கெத்செமனேயின் வியாகுலம்**<br>*மத்தேயு 26:36 – 46; மாற்கு 14:32 – 42; லூக்கா 22:39 – 46.*<br>**இயேசு கைது செய்யப்பட்டார் –**<br>*யோவான் 18:1 – 12; மத்தேயு 26:47 – 56; மாற்கு 14:43 – 50; லூக்கா 22:47 – 53* |
| ***மாற்கு 14:43 – 46 – ஆகிய வசனங்கள், இயேசுவின் காட்டிக்கொடுக்கப்படுதலையும் மற்றும் கைதுசெய்யப்படுதலையும் விவரிக்கின்றன*** | |

# இயேசுவிற்கு நடந்திட்ட விசாரணை

*அடிப்படையில் இரண்டு (வகையான) விசாரணைகள் நடந்தன (மதச்சார்பற்ற மற்றும் மதஞ்சார்ந்த): ஒவ்வொன்றும் மூன்று கட்டங்கள் கொண்டதாய், மொத்தம் ஆறு கட்டங்கள் இருந்தன.*

* * * * * * * *

***யோவான் 18:19 – 24 – இயேசு காய்பாவிடம் அனுப்பப்பட்டார், மேலும் அங்கே அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரணை நடந்தது.***

***நள்ளிரவு 12:30***

## மதஞ்சார்ந்த விசாரணை, கட்டம் – 1

*அன்னாவிற்கு முன்பாக [ஒரே மனிதனால் நடத்தப்படுகிற நீதிமன்றத்திற்கு எந்த ஏற்பாடும் அப்போது இருக்கவில்லை; இருந்தாலும் இது நிகழ்ந்தது]*

***யோவான் 18:12 – 24***

*12. அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப்பிடித்து, அவரைக் கட்டி,*



*13. முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான்.*

*14. ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே.*

*15. சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால், இயேசுவுடனேகூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்தான்.*

*16. பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல்காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டுபோனான்.*

*17. அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான்.*

*18. குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று, குளிர்காய்ந்துகொண்டிருந்தார்கள்; அவர்களுடனே கூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான்.*




*19. பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரித்தான்.*

*20. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.* ***[குறிப்பு: குற்றமெதுவும் சுமத்தப்படவில்லை.]***

*21. நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார்.*

*22. இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்.*



*23. இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்.* ***[இயேசு இங்கே ஓர் ஆட்டிக்குட்டியைப் போல அமைதியாய் இருக்கவில்லை.]***

*24. பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்.*

* * * * * * * * * *

***மத்தேயு 26:57 – 61: இது காய்பா மற்றும் யூத ஆலோசனைச் சங்கத்தாருக்கு (Sanhedrin) முன்பாக இயேசு கேள்வி கேட்கப்பட்டத்தைப் பற்றிய பதிவினைத் தருகின்றது; பொய்ச்சாட்சிகள் தேடப்பட்ட முயற்சியானது, 'ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகுமென்று இவன் சொன்னான்' என்று குற்றஞ்சாட்டின இரண்டு பேரை மாத்திரம் கொணரச் செய்தது; பின்னர் அவர் கிறிஸ்துதானா என்பதைச் சொல்லும்படிக்கு காய்பாவால் தேவன்பேரில் ஆணையிட்டுக் கேட்கப்பட்டது.***

*இரவு 1:00 – 2:00*

## மதஞ்சார்ந்த விசாரணை, கட்டம் – 2

*காய்பாவின் வீட்டில், யூத ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக (யூத ஆலோசனைச் சங்கங்கமானது பகற்பொழுதுக்கு முன் கூடக்கூடாது என்பதால் இது ஒரு சட்டவிரோதமான விசாரணையாகும்.)*

***மாற்கு 14:53 – 65***

*53. இயேசுவை அவர்கள் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டுபோனார்கள்; அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடிவந்திருந்தார்கள்.*

*54. பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் வந்து, சேவகரோடேகூட உட்கார்ந்து, நெருப்பண்டையிலே குளிர்காய்ந்துகொண்டிருந்தான்.*

*55. அப்பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை.*



*56. அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லியும், அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை.* ***[பொய்யர்களின் அதிபதியாகிய சாத்தானால், முரண்பாடு ஏதுமில்லாத இரண்டு சாட்சிகளைத் திரட்ட முடியவில்லை – அது அவனுக்கு மோசமானதொரு இரவாக இருந்திருக்க வேண்டும்.]***

*57. அப்பொழுது சிலர் எழுந்து, கைவேலையாகிய இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேன் என்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று,*

*58. அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்.*



*59. அப்படிச் சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வாமற்போயிற்று.*

*60. அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று, இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்.*

*61. அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான்.* ***[மத்தேயு 26:63 "உன்னை***

***ஆணையிட்டுக் கேட்கிறேன்" – இதன் பொருள் சத்தியப்-பிரமாணத்தின் கீழ், இயேசு பதிலளித்தே ஆக வேண்டுமென்பதே – ஐந்தாவது சட்டத்திருத்தஞ்சார்ந்த முறையீடானது / Fifth Amendment plea அன்றிருக்கவில்லை (Fifth Amendment – அமெரிக்காவில் விசாரணையின்போது பதிலளிக்காமல் இருப்பதற்கான உரிமை பற்றிய சட்டத்திருத்தம்).]***

*62. அதற்கு இயேசு: **நான் அவர்தான்; [இயேசு உண்மையை உறுதிப்படுத்தினார்; என்றாலும், அது சட்டவிரோத விசாரணையில் செய்யப்பட்டது.]** மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார். **[தானியேல் 7: 13]***

*63. பிரதான ஆசாரியன் இதைக் கேட்டவுடனே, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன?*

*64. தேவதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்களெல்லாரும்: இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம்பண்ணினார்கள்.*

*65. அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்; வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்.*

* * * * * * * * * *

***இரவு 2:00 – 3:00***

## பேதுருவினால் மறுதலிக்கப்படுதல்

***லூக்கா 22:55 – 62; மாற்கு 14:66 – 72; யோவான் 18:26***
***(ஒன்றிணைக்கப்பட்டுள்ளது)***

***மாற்கு 14:66 – 72***

*66. அத்தருணத்திலே பேதுரு கீழே அரமனை முற்றத்திலிருக்கையில், பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து,*



*67. குளிர்காய்ந்து கொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து: நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய் என்றாள்.*

*68. அதற்கு அவன்: நான் அறியேன்; நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று மறுதலித்து, வெளியே வாசல் மண்டபத்துக்குப் போனான்; அப்பொழுது சேவல் கூவிற்று.*

*69. வேலைக்காரி அவனை மறுபடியும் கண்டு: இவன் அவர்களில் ஒருவன் என்று அருகே நின்றவர்களுக்குச் சொன்னாள்.*

*70. அவன் மறுபடியும் மறுதலித்தான். சற்றுநேரத்துக்குப்பின்பு மறுபடியும் அருகே நிற்கிறவர்கள் பேதுருவைப் பார்த்து: மெய்யாகவே நீ அவர்களில் ஒருவன், நீ கலிலேயன், உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது என்றார்கள்.*

*71. அதற்கு அவன்: நீங்கள் சொல்லுகிற மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்.*

*72. உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டுதரங் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு தனக்குச் சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவு கூர்ந்து, மிகவும் அழுதான்.*

***[மத்தேயு "அவன் மனங்கசந்து அழுதான்" என்று கூறுகிறார் – இது தேவனுக்கேற்ற துக்கத்தைக் குறிக்கின்றது. 2 கொரிந்தியர் 7:9, 10 – ஆகிய வசனங்களைப் பார்க்கவும்.]***

***யோவான் 18:26***

*பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு*

*காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி: நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான்.*

## *லூக்கா 22:55 – 62*

*55. அவர்கள் முற்றத்தின் நடுவிலே நெருப்பை மூட்டி, அதைச் சுற்றி உட்கார்ந்தபோது, பேதுருவும் அவர்கள் நடுவிலே உட்கார்ந்தான்.*

*56. அப்பொழுது, ஒரு வேலைக்காரி அவனை நெருப்பண்டையிலே உட்கார்ந்திருக்கக்கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடிருந்தான் என்றாள்.*

*57. அதற்கு அவன்: ஸ்திரீயே, அவனை அறியேன் என்று மறுதலித்தான்.*


*58. சற்றுநேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில் ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு: மனுஷனே, நான் அல்ல என்றான்.*

*59. ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப்பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து: மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன்தான் என்று சாதித்தான்.* ***[யோவான் 7: 51, 52: கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்றார்கள் – ஆனால், யோனா கலிலேயாவைச் சேர்ந்தவராய் இருந்தாரே!]***

*60. அதற்குப் பேதுரு: மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன் என்றான். அவன் இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று.*

*61. அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து,*

***62. வெளியே போய், மனங்கசந்து அழுதான்.***



***அதிகாலை 4:30***

# மதஞ்சார்ந்த விசாரணை, கட்டம் – 3

***விடியற்காலைப்பொழுதில் யூத ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக***

## *லூக்கா 22:66 – 71*

*66. **விடியற்காலமானபோது** ஜனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி:*

*67. **நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள்.** அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள். **[அவர் இங்கே "நான்தான்" என்று சொல்லவில்லை.]***

*68. நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள், என்னை விடுதலைபண்ணவுமாட்டீர்கள்.*

*69. இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். **[தானியேல் 7:13]***

*70. அதற்கு அவர்களெல்லாரும்: அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா என்று கேட்டார்கள்; அதற்கு அவர்: நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார். **[Diaglott – "You say; I am."; திருவிவிலியம் – "நான் இறைமகன் என நீங்களே சொல்லுகிறீர்கள்"] [அவர்களோ அவர் தேவதூஷணம் சொன்னதாகக் குற்றஞ்சாட்டினார்கள் – ஆனால் உண்மையில் அவர்தான் தேவனுடைய குமாரனாக இருந்தார்– இதுவே சத்தியம்.]***

*71. அப்பொழுது அவர்கள்: இனி வேறுசாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள். **[சட்டவிரோதமான விசாரணையில்]***

## *மாற்கு 15:1*

*1. பொழுது விடிந்தவுடனே, பிரதான ஆசாரியரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் கூடி ஆலோசனைபண்ணி, இயேசுவைக் கட்டிக் கொண்டுபோய், பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்.*

* * * * * * * * * *

***[இயேசு, ஒரு சட்டவிரோத விசாரணையின்போது தாம்தான் தேவனுடைய குமாரன் என்று ஒப்புக்கொண்டார் என்றாலும், சட்டஞ்சார்ந்த விசாரணையில் அவர் அவ்வாறு செய்யவில்லை.]***

***அதிகாலை 5:00***


## மதச்சார்பற்ற விசாரணை, கட்டம் – 1

*பிலாத்துவுக்கு முன்பாக – அவருடைய அரண்மனையில்*

### யோவான் *18:28 – 38*

*28. அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்.* ***[தேவனுடைய குமாரனைக் கொன்றாலும் பரவாயில்லை; ஆனால் தங்களுடைய பாதரட்சையின் தோல் அரண்மனையின் கற்களைத் தொடக்கூடாதாம்.]***

*29. ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான்.*



*30. அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: இவன்* ***குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம்*** *என்றார்கள்.* ***[உண்மையில் எந்தக் குற்றச்சாட்டும் இருக்கவில்லை – ஒரு குற்றவாளி என்றால் அவன் சட்டத்தை மீறியிருந்திருக்க வேண்டுமே, அவ்வாறு செய்திருப்பின் அதற்காகக் குற்றஞ்சாட்டப்படுவது நியாயமாக இருந்திருக்கும்.]***

*31. அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்.*

*32. தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக்குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள்.*

*33. அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான்.* ***[ஐந்து நாட்களுக்கு முன்பு எருசலேமில் இயேசு இராஜாவாகப் போற்றப்பட்டார் என்பதை பிலாத்து அறிந்திருந்தார்.]***



*34. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார்.* ***[இது பிலாத்துவின் குற்றச்சாட்டு, யூதருடையது அல்ல.]***

*35. பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான்.*

*36. இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரிய-தல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான்* ***யூதரிடத்தில்*** *ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்-பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.*

*37. அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக:* ***நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்****; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.* ***[அவர் ஓர் இராஜா என்று அறிவிக்கும் இரண்டாம் உண்மை/சத்தியம்.]***

*38. அதற்குப் பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.*

* * * * * * * * *

***அதிகாலை 5:30***

## மதச்சார்பற்ற விசாரணை, கட்டம் – 2

### ஏரோதுக்கு முன்பாக

### ***லூக்கா 23:6 – 12***

*6. கலிலேயா என்பதைப் பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன்* ***கலிலேயனா*** *என்று விசாரித்து,*

*7. அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்றறிந்து, அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான்.*

*8. ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு,*

*9. அநேக காரியங்களைக்குறித்து, அவரிடத்தில் வினாவினான். அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.* ***[காலை மூன்றாம் மணிவேளையில், அதாவது, 9:00 மணிக்கு தாம் சிலுவையில் அறையப்படப்போகிறோமென்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் எதுவும் சொல்லவில்லை, இது அவரது விசாரணையைத் துரிதப்படுத்தியது.]***

*10. பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள்.*

*11. அப்பொழுது ஏரோது தன் போர்ச்சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான்.*

*12. முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்.* ***[யோவான்ஸ்நானகரைச் சிரச்சேதம் செய்த ஏரோது இவன்தான்.]***

* * * * * * * * *

***அதிகாலை 6:00***

## மதச்சார்பற்ற விசாரணை, கட்டம் – 3

*பிலாத்துவுக்கு முன்பதாக [பிலாத்து 6 தரம் இயேசு குற்றமற்றவர் என்று கூறினார்.]*


### யோவான் 18:39 – 40

*39. பஸ்காபண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால்* ***யூதருடைய ராஜாவை*** *நான் உங்களுக்காக விடுதலை பண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான்.*

*40. அப்பொழுது: அவர்களெல்லாரும் இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ணவேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள்; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்.*

## யோவான் 19:1 – 16

*1. அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.*



*2. போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி:*

*3. யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்.*

*4. பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் **இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்** என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான்.*

*5. இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான்.*

*6. பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக்*

*கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான்.*

*7. யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள்.*

***[குற்றஞ்சாட்டுதல்]***

*8 .* ***பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து,***

*9. மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.*

*10. அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்.*

*11. இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது;* **ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு** *என்றார்.* ***[இயேசு பிலாத்துவைத் தர்மசங்கடமான நிலையிலிருந்து/குற்றத்திலிருந்து விடுவிக்கிறார்.]***

*12. அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்.*

*13. பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான்.*

*14. அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்தநாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் ராஜா என்றான்.*



*15. அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள்.*

*16. அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோனார்கள்.*

* * * * * * * * * * * *

# இயேசுவின் சிலுவை மரணம்

**நான்கு சுவிசேஷங்களிலிருந்து எடுக்கப்பட்டு முழுமையான ஒரு பதிவாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.**

## *காலை 7:45 மணி*

### *மத்தேயு 27:26 – 31*

*26. அப்பொழுது, அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.*

*27. அப்பொழுது, தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவைத் தேசாதிபதியின் அரமனையிலே கொண்டுபோய், போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்து,*

*28. அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி,*

*29. முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி,*

*30. அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.*



*31. அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள்.*

## ***காலை 8:00 அல்லது 8:30 மணி***

### ***யோவான் 19:17***

*17. அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.*



### ***லூக்கா 23:26 – 32***

*26. அவர்கள் இயேசுவைக் கொண்டுபோகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள்.*

*27. திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.*

*28. இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.*

*29. இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவை-களென்றும் சொல்லப்படும் நாட்கள்வரும்.*

*30. அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்களென்றும் சொல்லத்தொடங்குவார்கள்.*

*31. பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள் என்றார்.*

*32. குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் அவரோடேகூடக் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.*

## மத்தேயு *27:33 – 36*

*33. கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது,*

*34. கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்.*

*35. அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக்கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.*



*36. அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல்காத்துக்-கொண்டிருந்தார்கள்.*

## காலை 9:00 மணி

### மாற்கு 15:25

*25. அவரைச் சிலுவையில் அறைந்தபோது மூன்றாம்மணி வேளையாயிருந்தது.*

### லூக்கா 23:34

*34. அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்.*

### யோவான் 19:19 – 22

*19. பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது.*

*20. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரெயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது.*

*21. அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள்.*

*22. பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான்.*

### மாற்கு 15: 27, 28

*27. அல்லாமலும், அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள்.*

*28. [அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதனாலே நிறைவேறிற்று.]*

## *மத்தேயு 27:39 – 44*

*39. அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி:*

*40. தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள்.*

*41. அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி:*

*42. மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.*

*43. தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்.*



*44. அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.*

## *லூக்கா 23: 36, 37*

*36. போர்ச்சேவகரும் அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் கொடுத்து:*

*37. நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக்கொள் என்று அவரைப் பரியாசம்பண்ணினார்கள்.*

## *யோவான் 19:25 – 27*

*25. இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்.*

*26. அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்.*

*27. பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.*

## *லூக்கா 23:39 – 43*

*39. அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.*

*40. மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?*

*41. நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு,*

*42. இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.*

*43. இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

## *நண்பகல் 12:00 மணி*

### *மாற்கு 15:33 – 36*

*33. ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.*

*34. ஒன்பதாம்மணி நேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.*

*35. அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்டபொழுது: இதோ, எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்.*



*36. ஒருவன் ஓடி, கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்து: பொறுங்கள், எலியா இவனை இறக்க வருவானோ பார்ப்போம் என்றான்.*


### யோவான் *19:28 – 30*

*28.* அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்.

*29.* காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள்.

*30.* இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச்சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

**பிற்பகல் *3:00* மணி**



### லூக்கா *23:46*

*46.* இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார்.

### மத்தேயு *27:50, 51*

*50.* இயேசு மறுபடியும் மகாசத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.

*51.* அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.

### *மத்தேயு 27:54*

*54. நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல் காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.*



### *மாற்கு 15:39 – 41*

*39. அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான்.*

*40. சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்துவந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்,*

*41. அவருடனேகூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள்.*

## *லூக்கா 23:48*

*48. இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.*

## *யோவான் 19:31 – 37*

*31. அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.*

*32. அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள்.*

*33. அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.*

*34. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.*

*35. அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்.*

*36. அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.*

*37. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.*

## மாலை 5:00 – 6:00 மணி

### யோவான் 19:38, 39

*38. இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோனான்.*

*39. ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்.*



### லூக்கா 23:50, 51

*50. யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான்*

*51. அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், (யூதர்களுடைய . ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்)*

## *மாற்கு 15:44, 45*

*44. அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து: அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான்.*

*45. நூற்றுக்கு அதிபதியினாலே அதை அறிந்துகொண்டபின்பு, சரீரத்தை யோசேப்பினிடத்தில் கொடுத்தான்.*

* * * * * * * * * * *

# இயேசு கிறிஸ்துவுக்கு நடந்த விசாரணை

## ஹோமர் ஹாம்லின் அவர்களுடைய பிரசங்கம்

*ஒவ்வொரு வருஷமும் நாம் இயேசுவினுடைய மரணத்தின் நினைவுகூருதலை ஆசரிக்கும்போது, குறிப்பாக அவருடைய மரணத்தில் முடிவடைந்த அந்தக் கடைசி நாளில் அவர் அனுபவித்தவற்றை உணர்ந்துகொள்வதன் மூலம், நாம் அவருக்கு நெருக்கமாகக் கொண்டுவரப்படுகிறோம். இதனைக்காட்டிலும் அவரது வாழ்க்கைக்குறித்துப் பதிவுசெய்யப்பட்ட வேறு எக்காரியமும், அவர் நம் சார்பாக அனுபவித்த பாடுகள் மற்றும் பலியின் அளவினை மதித்துணருவதில் அவ்வளவு தாக்கத்தினை ஏற்படுத்துவதில்லை.*

*இந்த ஆய்வுரைக்கான அடிப்படையானது, பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சேவை மன்றத்தின் (service club) மதிய விருந்தின்போது கொடுக்கப்பட்ட ஓர் உரையிலிருந்து வந்ததாகும்; ஒரு மதச்சார்பற்ற உரையென விவரிக்கப்பட்ட அதில் இயேசு கிறிஸ்துவினுடைய விசாரணைகளின் சட்டரீதியிலான அம்சங்கள் குறித்துப் பார்க்கப்பட்டது. நான் விரும்பியவண்ணம் அதைத் தயங்காமல் பயன்படுத்துமாறு எனக்கு அனுமதியளித்தவராகிய ஓரிகானில் உள்ள போர்ட்லேண்டைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு.ஹோவர்ட் ராங்கின் அவர்களே மூல ஆராய்ச்சியைச் செய்தவர். சில ஆண்டுகளுக்கு முன்பு, அவரிடம் உலகின் மாபெரும் விசாரணையைப் பற்றிய ஒரு பாடத்தைத் தயார்செய்யும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்; பின்னர் இந்தத் தகவல் நமக்குக் கிடைக்கச் செய்தவரால் அடையாளம் காணப்பட்டது, அவர் நமக்காகப் பாடநுபவித்த இயேசுவின் பாடுகளை மதித்துணருவதில் இது ஓர் ஆசீர்வாதமாக இருக்குமென்றும் நம்புகிறார்.*

பஸ்கா பண்டிகையின் முடிவின்போது, அநேகமாக ஏப்ரல் 6, கி.பி. 33 – இல், இயேசு தம்முடைய மரணத்தின் நினைவுகூருதலை நிறுவினார்; இது ஒவ்வொரு வருஷமும் அந்தத் தேதியின் வருடாந்தர ஆசரிப்பில் வேத மாணவர்களால் முறையாக அநுசரிக்கப்படும் நிகழ்வாக இருந்து வருகின்றது. அப்பத்திலும்



திராட்சரசத்திலும் பங்கெடுத்தப் பிற்பாடு, இயேசுவும் அப்போஸ்தலர்களும் கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றனர். தம்முடைய அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாசால் தாம் காட்டிக்கொடுக்கப்படப்போவதை இயேசு ஏற்கனவே அறிந்திருந்தார்; இவ்வாறாக உலகின் மாபெரும் விசாரணையானது ஆரம்பமாகியது.

இயேசுவைத் தவிர, அதில் சம்பந்தப்பட்டிருந்த ஏனைய கதாபாத்திரங்களைக் குறித்து நாம் சற்று அறிந்துவைத்துக்கொண்டால் அது அவ்விசாரணையை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவியாக இருக்கும். இயேசுவின் மரணத்துக்கு ஏற்பாடுபண்ணினதில் அன்னாதான் நேரடியான பொறுப்பாளியாக இருந்தபடியால், இருக்கும்

கதாபாத்திரங்களிலேயே அவர் முக்கியமானவராக இருக்கின்றார். அவர் சிலரால் யூதேயாவின் முடிசூடா மன்னராகக் கருதப்பட்டார்; அவர் அந்த முழு மாகாணத்திலேயே பெரும் ஐசுவரியவானாகவும், அதிக செல்வாக்கு மிக்கவராகவும் இருந்தார். அவர்தான் ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று ஜனங்களுக்குச் சொல்ல காய்பாவை வழிநடத்தியிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது. அவருடைய வார்த்தைகள் எத்துணை சரியானவையாகவும், அதேசமயம், அவருடைய நோக்கங்கள் எத்துணை மோசமானவையாகவும் இருந்திருக்கின்றன! *(யோவான் 18:14)* இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு வழிவகுத்திட்ட காரியங்களை அன்னா திட்டமிட்டாரென்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. அன்னா பதினேழு வருடங்கள் பிரதான ஆசாரியராக இருந்தார், பின்னர், தனது ஆறு குமாரர்களில் ஒவ்வொருவரையும் அப்பணிக்கு நியமித்து, அடுத்தடுத்து அவர்களைப் பதவி நீக்கமும் செய்தார், இறுதியாக அவரது மருமகனான காய்பாவை நியமித்தார். அன்னா ஆலயத்தில் காசுக்காரர்களைக் கட்டுப்படுத்தி, அவர்களிடமிருந்து அநேகமாகக் கணிசமான இலாபமும் ஈட்டினார். இயேசு



காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து விரட்டியடித்தபோது, அவர் அன்னாவின் ஐசுவரியம் மற்றும் அதிகாரத்தின் ஆணிவேரையும் சேர்த்துதான் தாக்கியிருந்திருக்கிறார் *(மாற்கு 11:15 – 17)*; இதன் விளைவாக, தம்முடைய சொந்த மரண ஆணைக்கு தாமே வித்திட்டார்.

அன்னா தனது சொந்த நலன்களுக்காக மாத்திரமே பணியாற்றினாரென்பதும், சட்டத்தின்மீது சிறிதும் அக்கறையில்லாமல் இருந்திருக்கிறாரென்பதும் தெளிவாகிறது. மேலே

*குறிப்பிட்டுள்ளபடி, அவர் இஸ்ரயேலின் மாபெரும் அரசியல் சக்தியாக இருந்திருக்கக்கூடும், மற்றும் இயேசுவின் மரணத்துக்குப் பிரதான காரணராகவும் இருந்திருக்கிறார்.*

*நமது கதையின் அடுத்த கதாபாத்திரம் பொந்தியுபிலாத்து ஆவார்; அவர் இன்று ஸ்பெயினின் பார்சிலோனாவாக இருக்கும் ஊரில் பிறந்தவர். இராயனின் பேத்தியான கலவுதியாவை அவர் திருமணஞ்செய்யாமல் இருந்திருந்தால், அவர் அறியப்படாத ஒரு நபராகவே இருந்திருப்பார். இந்த வெற்றியினிமித்தமாக, பிலாத்து உரோம அதிபதி எனும் பதவிக்கு உயர்த்தப்பட்டார்; மேலும் அவருடைய முதல் பணியாக யூதேயாவின் தேசாதிபதி பதவி வழங்கப்பட்டது. அவர் ஏதோ தார்மீக ரீதியாகவோ அறிவுப்பூர்வமாகவோ தகுதியுள்ளவராய் இருந்தபடியால் இப்பொறுப்புக்கு வந்தார் என்பதாகத் தெரியவில்லை. அவர் யூதேயாவிற்கு வந்தவுடன், அவர் சில விதிமுறைகளை விதிக்கவும், சில மத உரிமைகளை மறுக்கவுஞ்செய்தார்; இது கலவரங்கள் மற்றும் கிளர்ச்சிகளைத் தூண்டியது, இதனால் உரோமர்கள் மற்றப் பகுதிகளிலிருந்து சேனைகளை வரவழைக்க வேண்டியிருந்தது.*

*நமது கதையின் மற்றொரு கதாபாத்திரம், இயேசுவின் விசாரணைகளில் ஒன்றிற்குத் தலைமை தாங்கிய ஏரோது ஆவார்; இவர் அநேகமாக இயேசு சிறுபிள்ளையாக இருந்தபோது குழந்தைகளைக் கொலைசெய்த ஏரோதின் பேரனாக இருந்திருக்கக்கூடும். இந்த ஏரோது கலிலேயாவின் துணை-காற்பங்குதேசாதிபதியாக (Vice-Tetrarch of Galilee) இருந்தார், மேலும் இவரே யோவான் ஸ்நானகரைச் சிரச்சேதம்செய்வதற்கு உத்தரவுமிட்டவர். அவர் இயேசுவைச் சந்திப்பதற்கு உண்மையிலேயே ஆசையாயிருந்தார், மேலும் இயேசு தன்னுடைய அரண்மனையில் ஏதாவது அடையாளங்களைக்காட்டிப் பொழுதுபோக்கினைக் காட்டுவார் என்று ஏரோது நம்பியிருந்தார். இயேசு முன்பு ஒருமுறை ஏரோதை “அந்த நரி” என்று குறிப்பிட்டிருந்தார்; இது ஒன்று மாத்திரம்தான் இயேசு தெரிவித்த ஒரே தனிநபர்சார்ந்த இழிவான கருத்தாகும்.*

*இறுதியாக, பரபாஸ் இருந்தார். வேறொருவரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட ஜனங்களாக இருப்பது இன்றைய ஜனங்களுக்குள்ளது போலவே கி.பி 33 – இலிருந்த*

யூதர்களுக்கும் விரும்பத்தகாததாகவும் வெறுப்பாகவும் இருந்தது. வெறுக்கப்பட்ட உரோமர்களைத் தங்களின் மண்ணிலிருந்து விரட்டி, ஒரு தேசமாக அரசாங்கத்தையும், அரசியல் சுதந்திரத்தையும் மீட்டெடுக்க வேண்டுமென்பதே அன்று பலரின் இருதயங்களிலும் மனங்களிலும் பற்றியெரிந்த இலட்சியமாக இருந்தது. பரபாஸ் தனது நாளின் கிளர்ச்சியாளராகவும், புரட்சிவீரனாகவும் இருந்தார். இராஜ்யத்தை மீண்டும் நிறுவுவதற்குப் போதுமான ஆயுதங்களையும் படைகளையும் ஒன்றுதிரட்ட முயன்ற பிரபலமான வீரனாக இருந்தார். இதைத்தான் இயேசுவும் செய்வாரென்று அவருடைய சொந்த சீஷர்களும்கூட நினைத்திருந்தார்கள்!

இயேசுவின் காலத்திலிருந்த மோசேயின் நியாயப்பிரமாணம் மற்றும் உரோம சட்டமான ஜஸ்டினியனின் நடைமுறை சட்டவிதிகள் ஆகியவற்றை இன்று நம்மால் பகுப்பாய்யவும் படிக்கவும் முடிகின்றது. இதை வைத்தும், ஆறுமணி நேரத்திற்குள் நடந்த இவ்வனைத்து விசாரணைகளில் தெரிவிக்கப்பட்ட உண்மைக்கூற்றுகளைப் பயன்படுத்தியும், இந்நிகழ்வுகளின் சட்டபூர்வமானத்தன்மை குறித்து சில முடிவுகளை நம்மால் எட்ட முடிகின்றது. இவ்விசாரணைகளின் - போது சட்டரீதியாக ஏராளமான தவறுகள் நிகழ்ந்தன என்பதை நாம் அறிவோம்; மேலும், மேல்முறையீடு செய்யும் உரிமை இயேசுவுக்கு இருந்திருந்தால், கிட்டத்தட்ட இவற்றில் ஏதேனும் ஒன்று அவரை விடுவிக்க போதுமானதாக இருந்திருக்கும். சில சமயங்களில் அமெரிக்காவில் உள்ள நாங்கள், முதன்முதலில் நாங்கள்தான் தனிநபரின் உரிமைகள், சுதந்திரங்கள் மற்றும் அவ்வுரிமைகளைப் பாதுகாப்பதற்கான போதுமான பாதுகாப்பு என்பவைகளின் தேவை குறித்து ஆழ்ந்த அக்கறை காட்டுபவர்களாக இருந்தோமென்று நம்பினோம். ஆனால் அது உண்மையன்று. யூதர்கள் அந்த உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதில் இன்னுமே அதிஆழமான அக்கறைக்கொண்டிருந்தனர்; மேலும் அவர்கள் அப்பாதுகாப்புகளை உறுதிப்படுத்துவதற்காக இன்று நம்மிடம் இருப்பதைக்காட்டிலும் மாபெரும் பாதுகாப்பான மற்றும் விரிவான நடைமுறைகளை நிறுவியிருந்திருக்கிறார்கள். எந்தவொரு ஆபிரகாமின் குமாரனும் எச்சூழ்நிலையிலும்

அநியாயமாகவோ அல்லது தவறாகவோ கொல்லப்படக்கூடாது என்றிருந்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

***மாற்கு 14:43 – 46 – ஆகிய வசனங்கள், இயேசுவின் காட்டிக்கொடுக்கப்படுதலையும் மற்றும் கைதுசெய்யப்படுதலையும் விவரிக்கின்றன.***

**சட்டத்தினுடைய தவறுகளின் முதலாவது தவறு இங்கே நிகழ்ந்தது.** ஒரு கூட்டாளி, ஒரு சக குற்றவாளி வழங்கிய தகவலின்பேரில் இயேசு கைதுசெய்யப்பட்டார். அவர்களுடைய மோசேயின் பிரமாணத்தின்கீழ், தானே ஒரு சக குற்றவாளியாக அல்லது சதிகாரராக இருக்கும் ஒருநபரை நம்பகமான ஒரு சாட்சியாகக் கருத முடியாது; எனவே, மற்றொருவரைக் கைதுசெய்வதை நியாயப்படுத்துவதற்கு யூதாசின் வார்த்தையானது சட்டப்பூர்வமாகப் போதுமானதாக இருக்கவில்லை. ஆயினும்கூட, கூட்டாளியான அவருடைய சீஷனாகிய யூதாஸ்காரியோத்து கொடுத்த தகவலின் பேரில்தான் இயேசு கைதுசெய்யப்பட்டார்.



பிரதான ஆசாரியரால் அனுப்பப்பட்ட போர்ச்சேவகர்களும் திரளான ஜனங்களும் பட்டயங்கள், தடிகள் மற்றும் தீப்பந்தங்களை ஏந்தியபடி வந்திருக்கையில் நள்ளிரவு

வாக்கில், தோட்டத்தில் அவர் கைதுசெய்யப்பட்டார். மோசேயினுடைய பிரமாணமானது, சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகும் சூரிய உதயத்திற்கு முன்பும், ஒரு மரணத்தண்டனைக்குப் பாத்திரமான குற்றத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரைக் கைதுசெய்வதைத் தடைசெய்தது; அதில் அவரது உயிர்கூட பறிப்போக நேரிடலாம். இருள் சூழ்ந்த நேரத்தில் தனது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடமிருந்து அழைத்துச் செல்லப்படுகிற ஒருவருக்கு, ஏதோவொரு வகையில் அவரது சட்டப்பூர்வ உரிமைகள் மறுக்கப்படலாமென்றும், அவர் நியாயமாகக் கைது செய்யப்பட்டார் என்பதை உறுதிப்படுத்த போதுமான பாதுகாப்புகளும் மேற்பார்வையிடப்படாதிருக்கு-மென்றும் அவர்கள் நம்பினார்கள். ஆனால் பாருங்கள், இருள்சூழ்ந்த வேளை – நடுராத்திரியின்போதுதான் இயேசு கைது செய்யப்பட்டார்.

## யோவான் 18:12, 13 – இயேசுவினுடைய விசாரணையின் இரண்டாம் தவறைப் பற்றின பதிவு.



*அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியராக இருந்த காய்பாவின் மாமனாகிய அன்னாவுக்கு, இயேசுவை விசாரணை செய்யவதற்கு அல்லது கேள்வி கேட்பதற்குக்கூட எந்த அதிகாரமோ அல்லது சட்டப்பூர்வ உரிமையோ இருக்கவில்லை. அவர் அப்போது நீதிமன்றத்தின் அதிகாரியாகவும் இருக்கவில்லை, எப்படியாக இருப்பினும் மோசேயின் சட்டம் ஒரே மனிதனால் நடத்தப்படுகிற நீதிமன்றத்திற்கு எந்த ஏற்பாட்டினையும் வழங்கவில்லை; குறைந்தபட்சம் மூன்று பேரும், அதிகபட்சம் எழுபத்து மூன்று பேரும் இருக்க வேண்டியிருந்தது. ஒரு நபரை ஒரு குற்றத்திற்காக விசாரிக்க ஒரே மனிதனால் நடத்தப்படுகிற நீதிமன்றமானது போதுமானதல்லவென்று அவர்கள் நம்பினார்கள், ஏனெனில் அந்த ஒரே நியாயாதிபதி பாரபட்சமாக இருந்துவிடக்கூடும், அத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவரின் உரிமைகளைப் போதுமான அளவுக்குப் பாதுகாக்க முடியாதுகூடப்போகலாம்.*



*இந்தத் தச்சரின் மகனும், கல்லாதவருமான இயேசு, தமது சட்டப்பூர்வமான உரிமைகளை அறிந்திருந்தார் என்பது அன்னா முன்பு நடந்த நடவடிக்கைகளிலிருந்து தெரிகின்றது. இந்த அறிவை அவர் எப்படிப் பெற்றுக்கொண்டாரென்பது உண்மை / சத்தியம் தெரியாதவர்களுக்கு ஒரு புரியாத புதிராகவே இருந்தது.* ***(யோவான் 7: 15, "அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்.")*** *தமக்காகச் சாட்சியமளிக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும், அவர்கள் தங்கள் வழக்கை நிரூபிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளைக் கொண்டு வர வேண்டும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார்* ***(உபாகமம் 19:15)****. அவர் தேவாலயத்திலும், ஜெபஆலயங்களிலும், வயல்வெளிகளிலும் வெளிப்படையாகப் போதித்தவரையில், தாம் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதையும் அவர் அறிந்திருந்தார், ஏனெனில் அவர் ஒருபோதும் இரகசியமாகப் போதிக்கவில்லை. சட்டப்படி தமக்கு எதிரான வழக்கை அவர்கள் நிரூபிக்க வேண்டுமென்பதை அவர் அறிந்திருந்தார், ஆனால் அவர்களோ அவ்வாறு செய்யத் தவறினார்கள்.*

### ***யோவான் 18:19 – 24 ஆகிய வசனங்கள், இயேசு எப்படி காய்பாவிடம் அனுப்பப்பட்டார் மற்றும் அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரிக்கப்பட்டார் என்பவைகளை விவரிக்கின்றன.***

*இயேசு அன்னாவுக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார், பின்னர் அந்த வருஷம் பிரதான ஆசாரியராகவும், மாபெரும் யூத ஆலோசனைச் சங்கத்தின் தலைவராகவும் இருந்த காய்பாவிடம் கட்டுண்டவராக அனுப்பப்பட்டார்; காய்பா அச்சங்கத்தினை நள்ளிரவுக்குப் பிறகு விரைவில் கூட்டியிருந்தார். மோசேயின் பிரமாணத்தின்படி, சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய உதயத்திற்கும் இடைப்பட்ட நேரங்களில் மாபெரும் யூத ஆலோசனைச் சங்கத்தினைக் கூட்ட முடியாது, ஏனெனில், பகல் நேரமல்லாத இராத்திரி வேளைகளில், நியாயாதிபதிகள் புத்திசாலித்தனமாகவும், விழிப்புடனும், துல்லியமாகவும் ஒரு நபருக்கு எதிரான சாட்சியத்தைக் கவனித்துக் கேட்க முடியாது என்று யூதர்கள் நம்பினார்கள். இருந்தாலும் பாருங்கள், நள்ளிரவுக்குப் பிறகே இயேசுவை விசாரணை செய்தார்கள்.*

***மத்தேயு 26:57 – 61 – ஆகிய வசனங்கள், காய்பா மற்றும் யூத தலைமைச் சங்கத்தின் முன் இயேசு கேள்வி கேட்கப்பட்டதைப் பற்றியும், பொய்ச்சாட்சிகள் தேடப்பட்டன என்பதைப் பற்றியும், அப்போது 'ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகுமென்று இவன் சொன்னான்' என்று இரண்டு பேர் மாத்திரமே குற்றஞ்சாட்டினார்கள் என்பது பற்றியும், பின்னர் அவர் கிறிஸ்துதானா என்பதைச் சொல்லும்படிக்கு காய்பாவால் தேவன்பேரில் ஆணையிட்டுக் கேட்கப்பட்டது என்பது பற்றியுமான பதிவினைத் தருகின்றன.***

*யூத ஆலோசனைச் சங்கத்தின் முன் நடைப்பெற்ற சட்ட நடவடிக்கைகளில், இன்று நாமறிந்திருப்பதுபோல, எந்தவொரு வழக்கறிஞரோ மாவட்ட வழக்கறிஞரோ அங்கு இருக்கவில்லை. குற்றஞ்சாட்டுகிற சாட்சிகளே குற்றத்தைச் சாட்டிவிட்டு, அவர்களே அதை ரூபிக்கவுஞ்செய்தனர், அத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவரைத் தீவிரமாக விசாரிக்கவோ அல்லது குற்றத்தை மெய்ப்பித்துக்காட்ட முயலவோ நீதிமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது. எபிரெய மதத்தைக் கிழித்தெறிய அல்லது அழிப்பதற்கு வகைதேடினாரென இயேசு முதலில் தேசத்துரோகக் குற்றத்திற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டார். 'தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும்' என்று இயேசு கூறியதாக இரண்டு சாட்சிகள் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால்,* ***யோவான் 2:21*** *– ஆம் வசனத்திலிருந்து,* ***"அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்"*** *என்பது நமக்குத் தெரியும். இருப்பினும், அவர் எருசலேமின் ஆலயத்தை அழிக்க விரும்புவதாகவும் மூன்று நாட்களில் மீண்டும் கட்டியெழுப்பப்போவதாகவும் அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்கோ ஆலயத்தைக் கட்டியெழுப்ப நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆனதே. இரண்டு சாட்சிகள் மாத்திரம் இருந்ததாலும், அவைகளும் முழுமையாக ஒவ்வாததால், இந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டும் கைநழுவிப்போய்விடுமென்பதைக் காய்பா உணர்ந்தவராய், சட்டத்திற்குப் புறம்பாக, மெய்ப்பித்துக் காட்ட முயலும் (prosecution) பொறுப்பினைத் தன் கையில் எடுத்துக்கொண்டார்.*

*தேசத்துரோகக் குற்றச்சாட்டை தன்னால் ஸ்தாபிக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்ட காய்பா, விசாரணையின்*

*நடுவில் குற்றச்சாட்டை மாற்றிவிட்டார்; இது இன்றைய நாட்களில் அனுமதிக்கப்படாத ஒரு காரியமாகும். குற்றச்சாட்டை தேவதூஷணமென மாற்றினார். இது குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்னை தெய்வீகத்தின் ஒரு பாகமாகக் கூறிக்கொள்ளும் குற்றமாகும் – அதாவது, ஒன்று தான் தெய்வீகமானவர் என்றோ, அல்லது தான் தேவனுடைய குமாரன் என்றோ கூறிக்கொள்ளும் குற்றமாகும். [**யோவான் 8:41** – இல் மதத் தலைவர்கள் **“ஒரே பிதா எங்களுக்குண்டு. அவர் தேவன்”** என்று கூறினார்கள். பாருங்கள், அவர்கள் தேவனை தங்களுடைய பிதாவாக உரிமை கொண்டாடலாம், ஆனால் உண்மையான தேவனுடைய குமாரன் தமது குமாரத்துவத்தின் உண்மையை ஒப்புக்கொண்டதற்காக அவரைத் தண்டித்தார்கள்– இது விசித்திரமானதே.]*



*காய்பாவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்க இயேசு மறுத்துவிட்டார், அவ்வாறு மௌனங்காப்பதற்கு அவர் சட்டபூர்வமாகவும் அனுமதிக்கப்பட்டார்; ஆனாலும், காய்பா ஒரு மாபெரும் தந்திர சாமர்த்தியத்துடன் **“உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்”** என்று இயேசுவிடம் கேட்டபோது **(மத்தேயு 26:63)** அவர் பதிலளிக்க வேண்டியிருந்தது. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்நிகழ்வே ஆணையிட்டுக் கேட்கும் ஒரே நிகழ்வாகுமென நான் நினைக்கிறேன். இது மிகவும் புனிதமான மற்றும் அரிதாகவே பயன்படுத்தப்படும் எபிரெய ஆணையாகும், “எனவே கடவுளே எனக்கு உதவுங்கள் / So help me God” என்ற நமது இன்றைய சத்திய- ஆணைகளுக்கு அப்பாற்பட்டதாகும். ஏனெனில், அது யாரிடம் உண்மையாகப் பதிலளிக்க வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறதோ, அது அவரைப் பதில் சொல்லியே ஆக வேண்டுமென்று கட்டாயமும்படுத்துகின்றது. இன்றைய பாஷையில், இயேசு ஐந்தாவது சட்டத்திருத்தத்தைப் / Fifth Amendment*



*பயன்படுத்த முடியவில்லை (Fifth Amendment – அமெரிக்காவில் விசாரணையின்போது பதிலளிக்காமல் இருப்பதற்கான உரிமை பற்றிய சட்டத்திருத்தம்). இயேசு இந்தச் சத்திய-ஆணையின் மகத்துவத்தை அறிந்திருந்தார், மேலும் அவரிடம்* ***"நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்"*** *என்று கேட்கப்பட்டபோது (ஆங்கிலத்தில் – RSV),* ***"அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 26:63, 64 – ஆங்கிலத்தில் – KJV)****. அவர் உண்மையிலேயே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதான் என்கிற இயேசுவின் இந்தச் சாட்சியத்துடன், காய்பா அச்சாட்சியத்தை நிறைவுசெய்துவிட்டு, அதற்கான ஒரு வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பே இயேசுவைக் கண்டனஞ்செய்து, பின்னர் உடனடியாக வாக்களிக்குமாறும் கேட்டுக்கொண்டார்* ***(வசனம் 65)****. இது அவர்களின் சட்டத்தைக் கடுமையாக மீறுவதாக இருந்தது.*

*நியாயப்பிரமாண பாஷையின்படி பார்த்தால், மோசேயின் பிரமாணத்தின்கீழ், மரணத்தண்டனைக்குப் பாத்திரமான குற்றத்தினுடைய சாட்சியத்தின் முடிவில், நியாயாதிபதிகள் தங்கள் வீடுகளுக்குச் சென்று மிதமான உணவுகளையே புசிக்கவும், மிதமான திராட்சரசங்களையே பானம்பண்ணவும் மற்றும் இரண்டு இராப்பகலுக்கு நன்கு நித்திரைப்பண்ணவும் வேண்டியிருந்தது; பின்னர், திரும்பி வந்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியத்தை மீண்டும் கேட்டுவிட்டு, அதன் பிறகு, வாக்களிக்க / தீர்ப்பளிக்க வேண்டுமென்றிருந்தது.*

*காய்பா ஒரே நேரத்தில் ஒருமிக்க அல்லது குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட கேட்டுக்கொண்டார், இது அவர்களுடைய பிரமாணத்தின் மற்றுமொரு படுமோசமான மீறலாகும். வயதின் அடிப்படையில், இளைய அங்கத்தினரிலிருந்து தொடங்கி, மூத்த மற்றும் மிகவும் முதிர்ந்தவர் வரை, ஒரு நேரத்தில் ஒருவரென வாக்களிக்க வேண்டுமென்று*

*நியாயப்பிரமாணத்தில் வெளிப்படையாக ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தது, ஏனெனில் இந்த முறையின் மூலமாக மாத்திரமே இளைய அங்கத்தினரின் வாக்குகள்மீது பெரியவர் மற்றும் அதிப்புத்திசாலிகளுடைய வாக்கின் செல்வாக்கு செலுத்தப்படாமலிருக்க முடியும்.*

*அவர்கள் அனைவரும் இயேசுவைக் குற்றவாளி என்று தீர்த்தனர். மோசேயின் பிரமாணத்தின்கீழ், குற்றவாளி குற்றமுள்ளவர் என்கிற ஏகமனதான தீர்ப்பானது அவர் குற்றமற்றவர் எனத் தீர்ப்புக்கூறி விடுதலை செய்தல் எனும் தீர்ப்புக்குச் சமமாக இருந்தது. அதாவது, குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றமற்றவரென்ற அனுதாபத்தையும் நம்பிக்கையையும் குறைந்தபட்சம் ஒரு நீதிமன்ற அங்கத்தினரிடமிருந்துகூட பெறமுடியாவிட்டால், அவருக்கு நியாயமான விசாரணை மறுக்கப்பட்டிருக்கின்தென்கிற யூதர்களின் நம்பிக்கையால் இந்த வெளிப்படையான முரண்பாடு விளக்கப்படுகின்றது. நம்மைப் பொறுத்தவரையில், ஏகமனதான தீர்ப்பானது முற்றிலும் உணர்ச்சிகரமான ரீதியில் எடுக்கப்பட்ட முடிவு மற்றும் "கும்பல் மனப்பான்மை" என்பவைகளின் சாத்தியத்தைப் பரிந்துரைப்பதாகவுள்ளது. ஆனால் அவர்களின் பிரமாணத்தில், குற்றவாளியெனத் தீர்க்கப்படும் தீர்ப்பானது மொத்தமுள்ளதைக்-காட்டிலும் ஒரு வாக்கு குறைவாகவும், மற்றும் பாதிக்கும் மேற்பட்டதாகவும் இருக்க வேண்டியிருந்தது. ஆனால் அங்கேயோ அவர்கள் அனைவருமே அவர் குற்றவாளியென்று வாக்களித்தனர்.*

*முன்பு குறிப்பிட்டது போல், ஒருவனையும் மரண ஆக்கினைக்குள்ளாக்க யூதர்களுக்கு அதிகாரமில்லாதிருந்தது* ***(யோவான் 18:31)****. ஆயினும், அப்போது எருசலேமிலிருந்த பிலாத்துவிடம் இயேசுவை அழைத்துச் சென்றனர். 1) குற்றச்சாட்டு / accusation, 2) விசாரணை / interrogation, 3) தற்காப்பு வாதம் / defense மற்றும் 4) தீர்ப்பு / verdict எனும் ஜஸ்டினியனின் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் நான்கு படிகளில் ஒவ்வொன்றையும் பிலாத்து நன்கு புரிந்துகொண்டு பின்பற்றினாரென்பது தெளிவாகத் தெரிகின்றது – அவர் அரண்மனையை விட்டு வெளியே வந்து,* ***" 'இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்' என்றார். அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: 'இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில்***

***ஒப்புக்கொடுக்கமாட்டோம்' என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: 'இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்' என்றார். அதற்கு யூதர்கள்: 'ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை' என்றார்கள்."*** *யூதர்களின் குற்றச்சாட்டைக் கேட்ட பிலாத்து இயேசுவை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று, விசாரணை மற்றும் பரிசோதனை என்ற இரண்டாவது படியைப் பின்பற்றினார். விசாரணையின் இந்தப் பகுதியைப்பற்றி யோவான் 18:28 – 38 ஆகிய வசனங்கள் பதிவு செய்கின்றன. அவர்*



*இயேசுவிடம்,* ***"நீ யூதருடைய இராஜாவா?"*** *என்று கேட்டார். நியாயத்தை முன்வைத்தலில் ஒன்றான மூன்றாவது படியாக இருக்கும் ஒரு தற்காப்பு வாதத்திற்குள்ளாக இயேசு சென்றார்.* **இயேசு பிரதியுத்தரமாக: "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்றார்.**



*அந்த வாதத்தில் திருப்தியடைந்து, மற்றும் குற்றச்சாட்டுகளின் வெளிப்படையான தவறினை நன்குணர்ந்து, பிலாத்து* ***"நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்"*** *எனும் தனது தீர்ப்பை யூதர்களுக்குத் தெரியப்படுத்தினார்.*

*இதற்கிடையில், பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர்களும், பரிசேயர்களும், போர்ச்சேவகர்களும் இயேசுவைச் சிலுவையில் அறையும்படி ஜனங்களைத் தூண்டிவிட்டனர். ஏதோவொரு வழியில் இந்தப் பொறுப்பினைத் தவிர்ப்பதற்காக பிலாத்து முயன்றுகொண்டிருந்தார், மேலும்* ***"இவன் கலிலேயா நாடுதொடங்கி இவ்விடம்வரைக்கும் யூதேயாதேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்" (லூக்கா 23:5)*** *என்று அவர்கள் கூறியபோது, பிலாத்து இந்தத் தகவலைச் சாத்தியமான தீர்வாகப்*

*பற்றிக்கொண்டார். இயேசு ஒரு கலிலேயராக இருந்தால், அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்பதையறிந்து பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்பிவைத்தார். இது இன்று "நீதிபதியின் சொந்த முன்மொழிவின் / வேண்டுகோளின் நிமித்தம் இடத்தை மாற்றுதல் / a change of venue on the judge's own motion" என்றழைக்கப்படுகின்றது. ஏரோதின் கேள்விகளுக்கு இயேசு பதிலளிக்கவில்லை, எனவே அவர்கள் அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, ஒரு மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கே அனுப்பிவிட்டார்கள்.* ***(லூக்கா 23:11)***

*இரண்டாந்தரமாக, பிலாத்து இயேசுவை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று,* ***" 'நீ எங்கேயிருந்து வந்தவன்?' என்றார். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை." (யோவான் 19:9 – 11). அப்பொழுது பிலாத்து: 'நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா' என்றார். அதற்கு இயேசு பிரதியுத்தரமாக: 'பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு' என்றார்.*** *பின்னர் பிலாத்து மீண்டும் கூட்டத்தினரிடம் சென்று* ***"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை"*** *என்று சொல்ல,* ***அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள்.*** *அதற்கு பிலாத்து* ***"ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்?"*** *என்றார்.*

*இயேசுவின் குற்றமற்றத்தன்மையை அறிந்த பிலாத்து, அவரை விடுவிக்க இன்னுமொரு முயற்சியை மேற்கொண்டார், அதாவது பஸ்கா பண்டிகையின் ஆரம்பத்தில் அவர்களுக்காகக் கைதுசெய்யப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு கைதியை தேசாதிபதி விடுதலைபண்ணுகிற வழக்கமொன்று இருந்ததை நினைவுகூர்ந்தார். இயேசுவை விடுவிக்க வேண்டுமா அல்லது பரபாசை விடுவிக்க வேண்டுமா என்று பிலாத்து அவர்களிடம் கேட்டபோது,* ***பரபாசை விட்டுவிடக் கேட்டுக்கொள்ளவும், இயேசுவை கொலைசெய்விக்கவும் பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஜனங்களை ஏவிவிட்டார்கள். (மத்தேயு 27:20 – 22).*** *பிலாத்து*

இயேசுவில் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியாததால், அவர் ஆசாரியர்களின் குற்றச்சாட்டுகளுக்கான காரணத்தைக்குறித்து அவர்களிடம் கேட்டார் ***(வசனம் 23).*** இயேசுவின் விடுதலை நடந்துவிடக்கூடும் என்பதை உணர்ந்த காய்பா, தன்னுடைய திறமிக்க காயை நகர்த்தலானார் – சாட்டப்பட்ட குற்றத்தை யூத குற்றத்திலிருந்து உரோமானிய குற்றமாக மாற்றினார்! பிலாத்து எதிர்க்க முடியாத ஒன்று, தேசத்துரோகமாகும், அதாவது, இராயருக்கு எதிரான தேசத்துரோகமாகும், ஏனெனில் **தன்னை இராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதியாவான்** என்றிருந்தது. இராஜா என்று கூறிக்கொள்ளும் ஒருவரைப் பற்றி தான் எதுவும் செய்யாமல்போய், அதை இராயரின் காதுக்குச் சென்றால், அது தனக்குச் சிரமத்தையே உண்டாக்குமென்று, காரண காரிய அடிப்படையில், பிலாத்து சிந்தித்திருக்கலாம்; மேலும் இயேசுவும் தான் ஓர் இராஜா என்பதை ஒப்புக்கொண்டிருந்தார். ஆயினும்கூட, பிலாத்து இயேசுவை விடுதலைபண்ண மீண்டும் ஒருமுறை முயன்றார், அவர்களிடம், "... ***'உங்கள் இராஜாவை நான் சிலுவையில் அறையலாமா' என்றார். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: 'இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை' என்றார்கள்." (யோவான் 19:15).***

*எனவே, பிலாத்து இயேசுவின் குற்றமற்றத்தன்மையையும் அதேவேளையில், ஆசாரியர்களை எதிர்ப்பது சாத்தியமற்றது என்பதையும் உணர்ந்தவராய், இவ்விஷயத்தில் தனது கைகளைக் கழுவி, இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தார்.*



***இயேசு பூமியில் வாழ்ந்த அந்தக் கடைசி இரவின் கொடூரமான மணிவேளைகளில் அவர் அனுபவித்த சோதனைகள், பாடுகள் மற்றும் மன வேதனைகளைக்குறித்து ஒரு கணம் மீண்டும் சிந்தித்துப் பார்க்கலாம் பிரியமானவர்களே. முதலில், இயேசு தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாசால் காட்டிக் கொடுக்கப்பட்டார்; பின்னர், அவர் ஒரு பொதுவான குற்றவாளியெனக் கைது செய்யப்பட்டார்; அடுத்ததாக அவர் மற்றொரு அப்போஸ்தலனாகிய பேதுருவால் மறுதலிக்கப்பட்டார்; பின்னர், அன்னா காய்பா என்பவர்களால் சட்டவிரோதமாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்; பின்னர், சட்டவிரோத வாக்கெடுப்பு மூலமாக சட்டவிரோதமாகக் கண்டனஞ்செய்யப்பட்டார்; யூத குற்றத்திற்காக மாத்திரம் குற்றஞ்சாட்டப்பட்டு உரோமானியரான பிலாத்துவிடம் அனுப்பப்பட்டார், பின்னர், ஏரோதுவிடம் அனுப்பப்பட்டார், அங்கு அவர் நிந்தித்துப் பரியாசம்பண்ணப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு, முள்முடியால் முடிச்சூட்டப்பட்டார்; பின்னர், அவரிடம் ஒரு குற்றத்தையும் காணாத பிலாத்துவிடம் திருப்பி அனுப்பப்பட்டார். பின்னர், தங்களுக்கு எந்த வழக்கும் இல்லாமல் போவதை உணர்ந்த யூதர்கள், இந்த வழக்கை உரோமானிய தேசத்துரோகக் குற்றச்சாட்டாக மாற்றினார்கள், இராயருக்கு எதிரான தேசத்துரோகத்திற்கான ஆதாரமாக அவருடைய ஒப்புதலையே பயன்படுத்தி, "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்பதாக மேலும் ஒரு கொடுமையான அவமதிப்பையும் கூடுதலாகச் சேர்த்தார்கள்; அது மாத்திரமல்லாமல் இயேசுவுக்குப் பதிலாக கொலைகாரனான பரபாசை விடுவிக்கவும் கேட்டுக்கொண்டார்கள்.***

*பின்னர், இறுதியில் பாரம்தாங்க முடியாது போகும் வரையில் தமது சிலுவையைத் தாமே சுமக்க வேண்டியிருந்த அவமானமிகும் சிலுவைப்பாதையை மேற்கொண்டார். பின்னர் இரண்டு பொதுவான குற்றவாளிகளுடன் வலிமிகுந்த மற்றும் இழிவான சிலுவையில் அறையப்படுதலானது நிகழ்ந்தது. வலியும் வேதனையும் இருந்தபோதிலும், இயேசு சிலுவையில் பாடுபட்டபோதிலும், அவர் தம்முடைய தாயாராகிய மரியாளைக் கவனித்துக்கொள்ளும்படிக்கு யோவானிடம் கேட்டுக்கொண்டார்.*

*ஆம், நம் சார்பாகவும், முழு மனித இனத்திற்காகவும் இயேசு அனுபவித்த பாடானது, ஏறக்குறைய 1990 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னும் தெளிவாக உள்ளது, அதனை உணர்கையில்,*



*இந்தப் பரந்த பிரபஞ்சத்தில்*
*இதுவரையிலும்*
*கொடுக்கப்பட்ட மற்றும்*
*இனிமேலும்*
*கொடுக்கப்படவிருக்கிற*
*எல்லாப் பரிசுகளிலேயே*
*மாபெரியதும்,*
*விலையேறப்பெற்றதுமாக*
*இருக்கும் இந்த உன்னதமான*
*பரிசுக்காக – அன்பின் மற்றும்*
*அனுதாபத்தின் கண்ணீரையே*
*நம்மால் சிந்த முடியும்!*

*ஆனால் அங்கே அந்தக் கொடுஞ்சிலுவையின் மீது, ஆணியறையப்பட்டு, விலாவில் குத்தப்பட்டு அடையப்பட்ட இயேசுவின் மரணமானது முடிவல்ல, அது ஆரம்பம் மாத்திரமேயாகும்: ஏற்றக் காலங்களில் அதற்குரியசாட்சி அனைவருக்கும் விளங்கிவருகிற மீட்கும்பொருளாக இருக்கிற அவருடைய மரணமானது நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றத்தின் மணிமகுடமாக இருந்தது. ஆதாமின் இழந்துபோன பரிபூரண ஜீவனுக்காக பரிபூரண மனிதனின் ஜீவன் பலிசெலுத்தப்பட்டது, இது இயேசுவின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த எந்த யூதனுடைய உயர்ந்த எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. ஆகவே, இயேசு தம்முடைய தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றி, பூமியின் குடும்பங்கள் அனைத்திற்குமான ஆசீர்வாதத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றபடியால்,* ***"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:22)*** *என்கிற வேத வாக்கியமானது, இன்றியமையாத மற்றும் உத்தரவாதமான ஒரு வாக்குத்தத்தமாக மாறுகின்றது.*

* * * * * * * * * * * * * * * * * * * * * * *

## *1 தீமோத்தேயு 2:5, 6*

*தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும்*
*மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும்*
*மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய*
*கிறிஸ்து இயேசு அவரே;*
*இதற்குரியசாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது.*

* * * * * * * * * * * * * * *

## *ஏசாயா 53*

*1. எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?*
*கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?*

*2. இளங்கிளையைப்போலவும்,*
*வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும்*
*அவனுக்கு முன்பாக எழும்புகிறார்;*
*அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை;*
*அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம்*
*அவருக்கு இல்லாதிருந்தது.*

*3. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால்*
*புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு*
*அநுபவித்தவருமாயிருந்தார்;*
*அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்;*
*அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை*
*எண்ணாமற்போனோம்.*

*4. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு,*
*நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;*
*நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு,*
*சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.*

*5. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,*
*நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;*
*நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை*
*அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால்*
*குணமாகிறோம்.*

*6. நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து,
அவனவன் தன்தன் வழியிலே போனோம்;
கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல்
விழப்பண்ணினார்.*

*7. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்,
ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை;
அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு
ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு
முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும்,
அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.*

*8. இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர்
எடுக்கப்பட்டார்;
அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்;
ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்;
என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.*

*9. துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை
நியமித்தார்கள்;
ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்;
அவர் கொடுமை செய்யவில்லை;
அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.*

*10. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி,
அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா
தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது,
அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்,
கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.*

*11. அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு
திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும்
அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்;
அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.*

*12. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி,*

*அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு,*
*அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து,*
*அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம்*
*அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்;*
*பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப்*
*பங்கிட்டுக்கொள்வார்.*

புதுசிருஷ்டியின் பொக்கிஷசாலை
See more Books & Articles at
www.foodfornewcreature.com